செ.வெ.எண்.31 நாள்.13.12.2017.

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் வட்டம், அச்சன்புதூர் கிராமத்தில் நடைபெற்ற மனுநீதி நாள் முகாமில் 44 பயனாளிகளுக்கு ரூ.3.78 இலட்சம் மதிப்பில் அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

-------

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் வட்டம், அச்சன்புதூர் கிராமத்தில் உள்ள சமுதாய நல கூடத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் மனுநீதி நாள் முகாம் இன்று (13.12.2017) நடைபெற்றது. இம்மனு நீதிநாள் முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப, அவர்கள் கலந்து கொண்டு பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார். தொடர்ந்து 44 பயனாளிகளுக்கு ரூ.3.78 இலட்சம் மதிப்பில் அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மனுநீதி நாள் முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது–

மாவட்ட தலைநகரங்களிலிருந்து, தொலைதூர கிராம மக்கள் பயன்பெறும் வகையில் அனைத்து துறை அலுவலர்களும் அக்கிராமத்திற்கு சென்று அரசின் திட்டங்கள் குறித்து எடுத்துரைத்து கிராம மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் நடத்துவது தான் மனுநீதி நாள் முகாமாகும். ஏற்கனவே, மனுநீதி நாள் முகாமினையொட்டி, 73 மனுக்கள் பெறப்பட்டுள்ளது. இதில் 30 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 43 மனுக்களின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், இப்பகுதியில் அனைவருக்கும் இலவச வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ் பசுமை வீடுகள் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டத்தின் கீழ் இலவச வீடுகள் கட்டித்தரப்பட்டுள்ளது. ஸ்மார்ட் கார்டு வழங்கும் திட்டத்தின் கீழ், திருநெல்வேலி மாவட்டத்தில் 7.50 இலட்சம் ஸ்மார்ட் கார்டுகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 80 ஆயிரம் ஸ்மார்ட் கார்டுகள் வழங்கப்பட்டு வருகிறது. ஸ்மார்ட் கார்டு திட்டத்தினால் வேறு நபர்களுக்கு பொருட்களை வழங்க இயலாது. பொருட்களை வாங்கினால் குறுஞ்செய்திகள் குடும்ப அட்டைதாரர்களின் கைபேசி எண்ணிற்கு உடனடியாக அனுப்பப்பட்டு வருகிறது. மேலும் ஸ்மார்ட் கார்டு பெறுவதற்கு தேவையான புகைப்படம், ஆதார் எண் போன்ற அலுவலர்கள் கேட்கும் தேவையான விவரங்களையும் வழங்க வேண்டும்.

உழவர் பாதுகாப்பு திட்டத்தின் மூலம் முதியோர் உதவித் தொகை, கல்வி உதவித் தொகை, விபத்து உதவித் தொகை உள்ளிட்ட பல்வேறு உதவித் தொகைகள் வழங்கப்பட்டு வருகிறது. முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் பல்வேறு நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், தமிழ்நாடு அரசு டெங்கு போன்ற நோய்களுக்கும் முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் சிகிச்சை அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. நமது மாவட்டத்தில், இவ்வாண்டு பருவமழை நன்றாக பெய்துள்ளது. அதன் காரணமாக, மாவட்டங்களில் உள்ள 13 அணைகளிலும் நீர் இருப்பு அதிகளவில் உள்ளது. விவசாயிகள் நெல் பயிர்களுக்கு காப்பீட்டுத் தொகை செலுத்தியுள்ளார்கள். மேலும், விவசாயிகள் இதர பயிர் வகைகளுக்கும் காப்பீடு செய்ய வேண்டும்.

ஆதரவற்ற பெண்களுக்கு கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் இலவச கறவை மாடு மற்றும் ஆடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ், கறவை மாடு மற்றும் ஆடுகள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு தொழில்

தொடங்குவதற்கு கடனுதவிகளை அரசு வழங்கி வருகிறது. பொதுமக்கள் அரசின் திட்டங்களை தெரிந்து கொண்டு பயன்பெற வேண்டுமென பேசினார்.

முகாமில், சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், 14 நபர்களுக்கு முதியோர் உதவித் தொகை பெறுவதற்கான ஆணைகளையும், வேளாண்மைத் துறையின் மூலம் 4 நபர்களுக்கு ரூ.37,500/– மதிப்பிலான மானிய உதவிகளையும், தோட்டக்கலைத் துறையின் மூலம் 1 நபருக்கு ரூ.4,800/– மதிப்பிலான உதவிகளையும், கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் 25 நபர்களுக்கு ரூ.3.35 இலட்சம் மதிப்பில் கறிக்கோழி வளர்ப்பு, தீவன மானியம் உள்பட மொத்தம் 44 நபர்களுக்கு ரூ.3.78 இலட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

இம்முகாமில், தென்காசி கோட்டாட்சியர் திரு.ராஜேந்திரன், சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் திரு.சங்கரலிங்கம், கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் மரு.ராஜேந்திரன், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.புண்ணியகோட்டி, வேளாண்மைத் துறை இணை இயக்குநர் திரு.பெருமாள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி.சாந்திராணி, பேரூராட்சிகள் துறை உதவி பொறியாளர் திரு.குருசாமி, கடையநல்லூர் வட்டாட்சியர் திரு.மாரியப்பன், குடிமைப்பொருள் வட்டாட்சியர் திரு.செல்வநாயகம் உள்பட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.